00026

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி

இறுதிப் பரீட்சை

**EPU6234** – வகுப்பறையை முகாமைத்துவம் செய்தல்

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி : **18/03/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 03.30

# பகுதி I

1. கல்வி முகாமைத்துவம் என்ற சொல்லை வரையறுக்குக.
2. முகாமைத்துவத்தின் தேவைப்பாட்டின் மூன்று (03) காரணிகளைக் குறிப்பிடுக.
3. கல்வி அமைச்சு 1982-1984 காலப்பகுதியில் இலங்கையில் கல்வி முகாமைத்துவத்தை சீர்திருத்த முயற்சிகளை ஆரம்பித்தது. அவை எவை?
4. இலங்கையில் ஆரம்பக் கல்வி சீர்திருத்தத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஏழு (07) தேர்ச்சிகள் எவை?
5. ஆரம்பப் பாடசாலைக்குத் தேவையான வளங்களை வகைப்படுத்துக.
6. பாடசாலையில் பராமரிக்கப்படும் கணக்குகளின் வகைகள் யாவை?
7. ஆரம்பப் பாடசாலையில் பெற்றோர் உறவுகள் ஏன் முக்கியத்துவமுடையது என்பதைச் சுருக்கமாக விளக்குக.
8. ஆரம்பப் பாடசாலையில் செயற்படுத்தக்கூடிய ஐந்து (05) இணைப் பாடத்திட்டச் செயற்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக.

**(08x05=40** புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. 1987 அரசியலமைப்பின் 13வது சீர்திருத்தத்தின் மூலம் அந்த மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் இலங்கையின் உள்ளூர் கல்வி நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. பாடசாலை அபிவிருத்தி சபையின் தொழிற்பாடுகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)

10.

i. கண்காணிப்பு என்றால் என்ன? உதாரணங்கள் மூலம் விளக்குக. (08 புள்ளிகள்)

ii. திறமையான மேற்பார்வையாளரொருவர் மேற்பார்வையின் போது கொண்டிருக்க வேண்டிய பண்புகளை உதாரணங்கள் மூலம் விவரிக்குக. (12 புள்ளிகள்)

11.

i. வலயக் கல்வி அலுவலகத்தின் தொகுப்பு விளக்கப்படத்தைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

ii. வலயக் கல்வி அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை பட்டியலிடுக. நீங்கள் பட்டியலில் குறிப்பிட்டுள்ள **மூன்று (03)** செயற்பாடுகளைத் தெரிவுசெய்து ஆரம்பக் கல்வியின் தரத்தை உயர்த்த அச் செயற்பாடுகள் எவ்வாறு உதவ முடியும் என்பதை விளக்குக. (12 பள்ளிகள்)

12.

i. ஆசிரியரொருவர் வகுப்பறையை ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறையில் எவ்வாறு முகாமைத்துவம் செய்கிறார் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

ii. ஆரம்பப் பாடசாலை வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரியர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? (06 புள்ளிகள்)

iii. அப் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு நீங்கள் முன்மொழியக்கூடிய தீர்வுகள் என்ன? (10 புள்ளிகள்)

13.

i. வள முகாமைத்துவம் என்றால் என்ன? (04 புள்ளிகள்)

ii. ஆரம்பப் பாடசாலையில் வள முகாமைத்துவத்தைப் பாதிக்கும் காரணிகளை விவரிக்குக? (06 புள்ளிகள்)

iii. வள முகாமையாளராக ஆரம்பப் பிரிவு ஆசிரியரின் வகிபங்கை விளக்குக. (10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*